தொகையை வாபஸ் பெறுங்கள், ரோடு இப்போது போட முடியாது என்று சொல்லியிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அப்படி தகவல் இல்லை.

Pattukkottai-Vadagudi Road

* 347-H *Q.*—SRI A. R. MARIMUTHU : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) when the work of laying the new road between Pattukkotttai and Vadagudi *via* Vandakkottai was taken up for execution; and

(*b*) the present stage of the work?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) The work was taken up for execution in the current year.

(*b*) The work is in good progress.

SRI A. R. MARIMUTHU : இந்த வேலை ஆரம்பத்திற்கு எடுத்துக்கொண்டு ஐந்து வருடங்கள் ஆகிறது. 1952-ல் ஆரம்பித்த வேலை இதுவரை சிறு சிறு பகுதிகளாக நடந்துவருவதினால் இதுவரை பூர்த்தியாகாமல் இருந்து வருகிறது. இந்த காலதாமதத்திற்கு காரணம் என்ன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இதைப்பற்றி என்னிடம் இருக்கின்ற தகவலின்படி 1957-ம் ஆகஸ்ட் 31-ம் தேதி உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது. 1957-1958-ல் இந்த வேலை பூர்த்தியாகிவிடும் என்று தெரிகிறது.

SRI R. SRINIVASA IYER : ஏற்கெனவே இந்த ரோடு பூர்த்தி செய்யப்படாததற்கு காரணம் நடுவிலுள்ளவர்கள் நிலம் கொடுக்காமல் இருந்ததினால்தான். இப்போது அது நிவர்த்திக்கப்பட்டுவிட்டது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இதை சரியானபடி கவனித்து சீக்கிரமாகவே புதுபாதை போடப்படும்.

SRI A. R. MARIMUTHU: தலைவர் அவர்களே, ஹைவேஸ் எஞ்சினியர் அவர்களிடத்தில் கேட்டதற்கு காண்ட்ராக்டர் சரியானபடி வேலை செய்யாததினால்தான் காலதாமதத்திற்கு காரணம் என்று கூறுகிறார்கள். ஆகவே அதன் பேரில் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. அப்படி ஏதாவது தகவல் இருந்தால் அதற்கு வேண்டிய முறையில் நடவடிக்கை எடுக்கலாம்.

Bridge across Agniyar

9-40 a.m. * 347-I *Q.*—SRI A. R. MARIMUTHU : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have received any mahazars recently that a bridge should be constructed across Agniyar in Sethu Road in the Pattukkottai taluk, Tanjore district; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) Yes, Sir.

(*b*) The work of constructing a causeway across the Agniyar at M. 12/3 of Muthupet-Mimisal Road is included in the Second Five-Year Plan.